# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 JULY No. 07


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் ~ 92:1-10

1. கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும்,
2. பத்து நரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும்,
3. காலையிலே உமது கிருபையையும், இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.
4. கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.
5. கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.
6. மிருககுணமுள்ள மனுஷன் அதை அறியான்; மூடன் அதை உணரான்.
7. துன்மார்க்கர் புல்லைப்போலே தழைத்து, அக்கிரமக்காரர் யாவரும் செழிக்கும்போது, அது அவர்கள் என்றென்றைக்கும் அழிந்துபோவதற்கே ஏதுவாகும்.
8. கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் உன்னதமானவராயிருக்கிறீர்.
9. கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள்; உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள்; சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள்.
10. என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்.



# உங்கள் அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளுங்கள்!

## PROTECT YOUR ANOINTING!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



ஒவ்வொரு மாதமும் 16 மொழிகளில் வெளிவரும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிக்கையை, உண்மையுடன் வாசித்து வரும் உலகம் முழுவதிலுமுள்ள **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தாருக்கு, நமது ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். **இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமான இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.** (வெளிப்படுத்தல் 1:4,5)."

ஒவ்வொரு சூழ்நிலையிலும், இந்த வசனம் எனக்கு மிகப்பெரிய உறுதியை அளிக்கிறது. ஏனென்றால், என்னுடைய கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிலைமைகளைப் புரிந்து கொண்டுள்ள ஒரு தேவன் எனக்கு உண்டு என்றும், அவர் என்னோடு ஒரு நண்பனாகவும், துணையாளராகவும் நடந்து வருகிறார் என்றும் நான் அறிந்து கொள்ளச் செய்துள்ளார். இந்த நம்பிக்கையுடன், உள்ளான சமாதானத்துடன், எந்த நிச்சயமுமில்லாத எதிர்கால நிகழ்வுகளைச் சந்திக்கவும், **உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே, எனக்காக தேவன்**

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**... உங்களுக்கு இரங்கும்படி**
**கர்த்தர் காத்திருப்பார்... ~ ஏசாயா 30:18**

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

கர்த்தருடைய கிருபையால் கடந்த மாதம் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியும், நெகேமியா வேதாகமக் கல்லூரிகளும்** 2024–2025 கல்வி ஆண்டுக்காகத் திறக்கப்பட்டன. தொடர்ந்து ஜெபத்தில் தாங்குங்கள்.

வருங்காலங்களில் சுயமாக ஊழியம் செய்பவர்களுக்கு ஆவிக்குரிய கல்வித் தகுதியும், ஏதாவது ஒரு ஸ்தாபனத்தின் அதிகாரமும் தேவைப்படும் என்று கூறப்படுகிறது. இந்த விஷயத்தில் உங்கள் ஊழியத்திற்கு உதவி செய்ய நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** ஆயத்தமாயிருக்கின்றன. தமிழ் மொழியில் மாலைநேர வகுப்புகளும், இந்தி மொழியில் தங்கிப்படிக்கும் வகுப்புகளும் நமது கல்லூரிகளில் நடைபெறுகின்றன. தேவையானவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** படித்துவிட்டு ஊழியம் செய்கிறவர்களின் முன்னாள் மாணவர்கள் ஐக்கியக் கூட்டம், 2023–2024ஆம் கல்வி ஆண்டின் மாணவர்களோடு கடந்த 13.05.2024 அன்றும், பட்டமளிப்பு விழா 01.06.2024 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கும் நடைபெற்றது. 38 மாணவர்கள் பட்டம் பெற்று ஊழிய ஸ்தலங்களுக்குச் சென்றுள்ளனர்.



**முன்னாள் மாணவர்கள் ஐக்கியக் கூட்டம்**



**2023–2024ஆம் கல்வி ஆண்டின் பட்டமளிப்பு விழா**

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** நடைபெறும் தமிழ் மற்றும் இந்தி வகுப்புகளுக்கு இன்னும் சில மாணவர்கள் தேவை. உங்களுக்குத் தெரிந்த ஆர்வமுள்ள மாணவர்களை அறிமுகம் செய்து உதவுங்கள்.

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call



**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▪ BIBLECOR - Postal Courses (3 languages) ▪ YouTube Ministry ▪ Online Courses ▪ Theological Correspondence Courses (2 languages) ▪ Church Planting ▪ Nehemiah Bible Colleges ▪ Gospel Printing Press ▪ Great Commission Partners ▪ St. Paul's Matriculation School ▪ Crusades ▪ Community Development

நம் ஊழியங்கள் அனைத்தையும் இன்னும் சிறப்பாக நடத்திட தரிசனமும், உண்மையும் உள்ள பத்திரிகை டிசைனர்கள், பத்திரிகை மொழிபெயர்ப்பாளர்கள், அச்சக உதவியாளர்கள், அச்சக டெக்னீஷியன்கள், மீடியா டெக்னீஷியன்கள், வாகன ஓட்டுநர்கள், காவலர்கள், கம்ப்யூட்டர் தட்டச்சுப் பணியாளர்கள், DTP ஆபிரேட்டர்கள், ஆங்கில உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், சபையில் செய்தி மொழிப்பெயர்ப்பாளர்கள் மிஷனரிகள், முழுநேர உதவிப் போதகர்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் எங்களுடன் ஊழியம் செய்ய ஆண்களும், பெண்களும் தேவை. ஊழியங்கள் பெருகுகின்றன. ஆட்களோ இல்லை. உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்.

நாட்கள் செல்ல செல்ல அச்சிடப்பட்ட பத்திரிகைகளையும், புத்தகங்களையும், வாசிக்கிற மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எல்லாவற்றையும் online –ல் வாசிக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். மேலும் சுமார் 40, 50 ஆண்டுகளாக நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை ஆவலுடன் வாசித்து. ஜெபித்து, பொருளாதார உதவிகளைச் செய்து வந்த பலர் வயது முதிர்ச்சியின் காரணத்தால் மறுமைக்குள் சென்று விட்டதாலும், வயோதியர் இல்லங்களில் வசித்து வருவதாலும், நமது பத்திரிகைகளை வாசிப்போரின் எண்ணிக்கை வெகுவாய் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் பெயர், முகவரி, ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு அனுப்பி உதவுங்கள். நமது பத்திரிகைகளை இலவசமாக அவர்களுக்கு அனுப்பலாம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

உங்கள் கரிசனையான பதில்களை எதிர்பார்க்கிறோம்.
தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது* **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** *5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

**ஆயத்தம் பண்ணியுள்ள தேவ திட்டத்தையும், நோக்கத்தையும்** தைரியமாக என்னால் எதிர்கொள்ள முடிகிறது. (எபேசியர் 2:10).

நம் ஒவ்வொருவரையும் தேவன் எவ்வளவு நேர்த்தியாக வனைந்துள்ளார் என்பதை நான் சிந்திக்கும்போது, நாம் இந்த உலகில் வாழும் வாழ்க்கை, ஏதோ ஒரு விபத்தைப்போல நடக்கிற ஒன்றல்ல – அது தேவனின் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை உணர்கிறேன். நமது உலகப்பெற்றோர்களே அறியாத வண்ணமாகவும், விரும்பாத வண்ணமாகவும் நாம் உண்டாக்கப்பட்டிருப்பதாக நாம் கருதலாம். ஆனால், சங்கீதம் 139:13,14 இல் குறிப்பிட்டுள்ளபடி, **நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய் தாயின் கர்ப்பத்தில், விசித்திர விநோதமாக உருவாக்கப்பட்டுள்ளோம்.** தேவன் ஒவ்வொருவரையும் கவனமாக உருவாக்கியுள்ளார். ஆகவே, நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வழிநடத்துதலுடன், நாம் உண்டாக்கப்பட்டதின் நோக்கத்தைக் கண்டறிந்து, அதை நிறைவேற்றி வாழ்வது நமது கடமையாகும்.

நமக்கிருக்கும் தெய்வீக அழைப்பும், வரங்களும், நமது நற்குணங்களினால் அருளப்பட்டதல்ல; தேவனது திவ்ய சுபாவத்தின்படியே நமக்கு கிருபையாய் அருளப்பட்டுள்ளன. இருப்பினும், தேவன் நியமித்த பாதையைவிட்டு விலகிபோவது எளிது. அவ்வாறு, நமக்கே புலப்படாத விதத்தில், தேவன் நமக்கென்று ஏற்படுத்திய வழியை விட்டு மிக தூரத்தில் போய்விட வாய்ப்புள்ளது. ஆனால் கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவருக்கு ஸ்தோத்திரமுண்டாகட்டும். நமது இரட்சகர் நியமித்த பாதைக்கு, பரிசுத்த ஆவியானவர் நம்மை மீண்டும் வழிநடத்தி கொண்டுவர அவரால் முடியும்.

தேவ திட்டத்திலிருந்து நம்மை விலகச் செய்யும் பொதுவான சில வழிகளை, இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் வாழ்க்கையை ஆராய்வதின் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

**<u>சவுல்: துவக்கம் மட்டுமல்ல, முடிவும் முக்கியம்!</u>**

ராஜாதி ராஜாவாகிய தேவனின் ஆளுமையைத் தள்ளிவிட்டு, தங்களுக்கென்று ஒரு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேலர் வேண்டிக்கொண்டபோது, தேவன் அவர்களது வேண்டுதலுக்குச் செவிகொடுத்தார். பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த கீஸ் என்ற பராக்கிரமசாலியான, எல்லோராலும் அறியப்பட்டவனின் மகனாகிய சவுல், இஸ்ரவேலின் முதல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். ஒரு ராஜாவுக்குத் தேவையான, உலகப்பிரகாரமான எல்லா தகுதிகளும் சவுலுக்கு இருந்தது. **... இஸ்ரவேல் புத்திரரில் அவனைப் பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை; எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்** என்று 1 சாமுவேல் 9:2 இல் பார்க்கிறோம். இவ்வாறு, தெரிந்தெடுக்கப்பட்ட, அபிஷேகம் பண்ணப்பட்ட, தாலந்து மிக்க இந்த மனிதனுக்குப் பரிதாபமான முடிவு வரக் காரணமென்ன?

**முதல் தவறு**
↓
**பெருமை!**

சவுலை ராஜாவாக தேவன் அழைப்பைக் கொடுத்தபோது, அவனுக்கு நம்பிக்கை இல்லாதிருந்தது. **...நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்துக் குடும்பங்களிலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா?...** என்று சவுல் கூறுவதை 1 சாமுவேல் 9:21 இல் கவனிக்கலாம். **அவன் அபிஷேகம் செய்யப்பட்ட பின்பும் நாணமுடையவனாய், ஒளிந்துக் கொண்டிருந்தான்.** (1 சாமுவேல் 10:22). கர்த்தர் நம்மை அழைப்பாரானால், அவரது கிருபை நம்மைத் தாங்கி ஆதரிக்கும் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரவேலின் முதல் ராஜாவாக சவுல் இருப்பதற்கு, கர்த்தருடைய கிருபை மட்டுமே போதுமானதாய் இருந்தது. அவனது அற்பமான ஆரம்பத்திலும், தேவன் அவனை ஆசீர்வதித்தார். இருப்பினும், அவன் வெற்றிக்குப்பின் வெற்றியாக அடைந்து, அதன் பலனாகிய பேரையும், புகழையும் அனுபவித்ததும், பெருமை அவன் கண்களை அடைத்துவிட்டது. நம்மில் பலரும் அப்படியே இருக்கிறோம்.

1 சாமுவேல் 15 இல், அமலேக்கியரை முற்றிலுமாய், பெண்கள், பிள்ளைகள் உட்பட அனைவரையும் அழிக்க தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். இது நமக்கு நன்கு தெரிந்ததே. இன்றைய காலக்கட்டத்தில் தேவன் மிகக் கொடியவர் என்று கணிக்கப்படலாம். ஆனால், இஸ்ரவேலரின் சரித்திரத்தை நோக்கும்போது அமலேக்கியர், முன்பு இஸ்ரவேலரை வேதனைப்படுத்தி, தாக்கி, சோர்ந்துபோன இஸ்ரவேலரை முற்றிலுமாய் அழிக்க முற்பட்டிருந்தனர்.

ஜாக்கிரதை!

**... உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்,** என்று சகரியா 2:8 இல் வாசிக்கிறோம்.

இஸ்ரவேலரைத் தமது சொந்த ஜனமாக, விசேஷமான சொத்தாகக் கருதும் தேவன், அமலேக்கியர் இஸ்ரவேலரைத் தவறாக நடத்தியதினால் வேதனைப்பட்டார். எனவே அவர்களைப் பழி வாங்க நினைத்தார். நமக்காக நமது யுத்தங்களை நடத்தும் தேவன் நமக்கு உண்டு என்று நாம் நன்றாக அறிந்து கொள்வது முக்கியம். இருப்பினும், சவுல் அமலேக்கியரின் காரியத்தில் வித்தியாசமாக நடந்து கொண்டான். அவன் செய்த தவறை சாமுவேல் சுட்டிக்காட்டிய போது, உடனேயே சவுல் தன் தவறை ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டு, மனந்திரும்பியிருக்க வேண்டும். ஆனால் அவனோ, **... இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரவேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம் பண்ணி, நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடே கூடத் திரும்பி வாரும் என்றான்.** 1 சாமுவேல் 15:30 என்று பார்க்கிறோம். தாழ்மை நிலையிலிருந்து பெருமையான மனநிலைக்கு சவுல் கடந்து வந்தது வெளிப்பட்டிருக்கிறது. தன் பெருமைகளை அனைவரும் அறிய வேண்டுமென, **தன்னையே மேன்மைப் படுத்தி, தனக்கென்று ஒரு ஜெயஸ்தம்பம் ஒன்றினை அவன் நாட்டினான்** (1 சாமுவேல் 15:12).

ஜெயமும் வெற்றியும் தொடர்ந்து ஒருவருக்குக் கிடைக்குமானால், அவரது மனநிலையில் மாற்றம் வர வாய்ப்புள்ளது. தாழ்மையான மனநிலையிலிருந்த சவுல், பேரையும் புகழையும் நாடிச் செல்கிறவனாக மாறியது பெருமையினால் வரும் ஆபத்துகளை விளக்கிக் காட்டுகிறது.

பெருமை நம்மை ஆட்கொண்டு விட்ட அந்த நொடியில்தானே, **தேவன் தமது பிரசன்னத்தை நம் வாழ்க்கையிலிருந்து நீக்கி, நமது சத்துருவாக மாறிவிடுவார்** (ஏசாயா 63:10). **... தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.** யாக்கோபு 4:6. நமது வார்த்தைகளையும் கிரியைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். "என் வீடு, என் வாழ்க்கை", "எனக்குத்தான் நன்றாகத் தெரியும்," என்று நமது சொத்தையும் அறிவையும் குறித்து நாம் ஆணித்தரமாகப் பேசியிருக்கிறோமா? வெளிப்புறத்தில் நாம் தாழ்மையாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டாலும், 'பெருமை' தலைதூக்குமானால், நமது உண்மையான குணம் வெளிப்பட்டு விடும். அத்தகைய நேரங்களில், "நான் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றும், "என்னிடம் அப்படிப் பேசுவதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்?" என்று நமது முக்கியத்துவத்தை முன்நிறுத்தி நம்மையும் அறியாமல் பேசிவிடுவோம்.

பெருமையினால் வரும் வீழ்ச்சியைத் தடுப்பது எப்படி என்று சவுலின் வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நமது சுயம் தலைதூக்கினால் இப்படித்தான் நடக்கும். "நான் யார் என்று தெரியுமா?" என்று வாயினால் கூறினாலும் சரி, அல்லது விசுவாசிகள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள், தங்கள் மனதிலே நினைத்தாலும் சரி, அது பெருமையின் நயவஞ்சக குணாதிசயம் என்று அறிந்து எச்சரிக்கையுடன் நாம் இருக்க வேண்டும்.

## இரண்டாம் தவறு

## சுய வஞ்சனை!

சுய வஞ்சனையுள்ள மனிதன் இவ்வாறு இருப்பான்:

(1) தனக்கு இல்லாததை இருப்பதுபோல் நம்புவான்

(2) தன்னிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக இருப்பதாக நினைத்துக் கொள்வான்.

(3) தனது வாழ்வில் உண்மையாயிருப்பதை விரும்பாமல் உண்மையற்ற மனிதனாய், உயர்ந்த நிலையில் இருப்பதுபோல் காட்டிக்கொள்வான்.

இதைக்குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது என்று பார்க்கலாம்:

* **... மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திரு.** ரோமர். 11:20.
* **... தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் ... தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.** ரோமர். 12:3.
* **... உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது.** ஒபதியா 1:3.

சவுலின் வாழ்க்கையில் இவையெல்லாம் காணப்பட்டுள்ளது. அவனது பெருமை அவனைக் குருடாக்கி, ஏமாற்றி, சுய வஞ்சகத்துக்கு நேராய் அவனை வழி நடத்திவிட்டது.

நாம் எவ்வாறு இந்த வீழ்ச்சியில் அகப்படுகிறோம்? அவ்வாறு சுய–வஞ்சனை என்ற வலையில் நாம் அகப்படும்போது என்ன நடக்கிறது?

### (அ) தேவனுக்கு முழுமையாய்க் கீழ்ப்படிய மனமற்றவர்களாகுகிறோம்!

**அமலேக்கியரை முற்றிலுமாய் அழிக்க தேவன் சவுலுக்கு கட்டளையிட்டார்**

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

ECHO OF HIS CALL 1968-2018 REACHING NATIONS

போதனா மொழி : தமிழ்

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Ministry**
**Diploma in Theology**

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 9566131858
**மின்னஞ்சல்** : sam@echoofhiscall.org /**இணையதளம்** : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2024 ஜூலை 19 முதல் ஆகஸ்டு 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்திலுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூலை 19 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 20 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 21 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 22 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும், அதன் திறமையான ஊழியர்களுக்காகவும்...

ஜூலை 23 ⇨ ஞாயிறுதோறும் பாலாஜி நகர், சந்தோஷபுரம் மற்றும் வேளச்சேரியில் நிகழ்த்தப்படும் சபை ஆராதனைகளுக்கு வரும் புதுவிசுவாசிகளுக்காக...

ஜூலை 24 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 25 ⇨ 2023–2024 கல்வி ஆண்டுக்கான நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர் சேர்க்கைகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 26 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

ஜூலை 27 ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் முழுநேர மற்றும் மாலைநேரக் கல்விகளுக்கான புதிய மாணவர்களை கொடுத்ததற்காக...

ஜூலை 28 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 29 ⇨ சந்திக்கப்படாத மக்களை சுவிசேஷம் சென்றடையச் செய்த கிருபைக்காக...

ஜூலை 30 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 31 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல் வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஆகஸ்டு 01 ⇨ நமது தலைமைச் சபைக்கு புது உத்வேகமுள்ள விசுவாசிகளை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக...

ஆகஸ்டு 02 ⇨ நமது அனைத்து சபை போதகர்கள் மற்றும் ஊழியர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஆகஸ்டு 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ ஆசிரியைகள் மற்றும் பள்ளி முதல்வரை தந்து ஆசீர்வதித்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஆகஸ்டு 04 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

ஆகஸ்டு 05 ⇨ உலகமனைத்திலும் உள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட...

ஆகஸ்டு 06 ⇨ நமது ஊழியங்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

ஆகஸ்டு 07 ⇨ நமது ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் உடல்நலத்திற்காக...

ஆகஸ்டு 08 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

ஆகஸ்டு 09 ⇨ நமது ஊடக ஊழியங்களின் மூலம் அதிகாலை 5.00 மணியளவில் யூடியூபில் ஒளிப்பரப்பாகும் 5 நிமிட தேவசெய்திகளுக்காக...

ஆகஸ்டு 10 ⇨ இன்று 56–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களுக்காக...

ஆகஸ்டு 11 ⇨ தேவ பிள்ளைகள்மேல் ஆவிக்குரிய மற்றும் உலகத்திற்குரிய ஆசீர்வாதங்கள் பொழியப்பட வேண்டி...

ஆகஸ்டு 12 ⇨ வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலமாக ஆண்டவரால் தொடப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்து சபைக்கு தொடர்ந்து வர வேண்டி ...

ஆகஸ்டு 13 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி ...

ஆகஸ்டு 14 ⇨ தேவனின் கிருபை மீண்டும் ஒருமுறை மக்களின்மேல் பொழியப்பட வேண்டி...

ஆகஸ்டு 15 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன்குடும்பங்களில் சமாதான குலைச்சல்களை ஏற்படுத்தும் சாத்தானின் தந்திர நடவடிக்கைகளை நிர்மூலமாக்க வேண்டி...

ஆகஸ்டு 16 ⇨ உலகமெங்கும் மரணத்திற்கேதுவான வியாதிகள் மற்றும் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் விடுதலையாக வேண்டி...

ஆகஸ்டு 17 ⇨ நமது இந்த மாதத்தின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

ஆகஸ்டு 18 ⇨ உலகமெங்கும் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிகள் மூலம் இரட்சிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பிராயத்தினருக்காக...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

(1 சாமுவேல்15:3). ஆனால், **சவுலோ ஆடு மாடுகளில் முதல்தரம் மற்றும் இரண்டாம் தரமானவைகளையும், நலமான எல்லாவற்றையும் தன்னிடமாய் வைத்துக்கொண்டதினால், தன்னைத்தானே அவன் வஞ்சித்துக் கொண்டான்** (1 சாமுவேல் 15:9). எவற்றையெல்லாம் அழிக்காமல் பத்திரமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தானே தீர்மானித்துக் கொண்டு, தான் செய்ததுதான் சரி என்று எண்ணி, தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டான். மேலும், **"கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்," என்று சாமுவேலிடம் பெருமையாகக் கூறினான்** (1 சாமுவேல் 15:13). ஆனால் தேவனது கட்டளைக்கு அவன் கீழ்ப்படியவில்லை.



**தேவனது கட்டளைக்கு கீழ்ப்படியாத சவுலை கண்டிக்கும் சாமுவேல்**

சவுலைப் போல நாமும் தேவசித்தத்திற்கு ஏற்றவாறுதான் நமது கிரியைகள் உள்ளன என்று பலமுறை நினைத்துக்கொள்கிறோம். உண்மையில் நாம் தேவ சித்தத்தைச் செய்வதில் குறைவுபட்டுக் காணப்படுகிறோம். தேவ சித்தத்திற்கு ஏற்ற கிரியைகளினால்தான் தேவனைப் பிரியப்படுத்த முடியும். ஆனால் சுய–வஞ்சனையோ நம் கண்களை மறைத்து விடுகிறது.

### (ஆ) நமது தவறை ஒத்துக்கொள்வதில்லை!

பெருமையும் சுய–வஞ்சனையும் அவன் கண்களைக் குருடாக்கி, இருதயத்தை உணர்வற்றதாக்கி, செவிகளைச் செவிடாக்கி, தேவ சத்தத்தைக் கேட்க முடியாத நிலைக்கு அவனைத் தள்ளின. அவன் ஜனங்கள் மேல் பழிபோட்டு, கர்த்தருக்கு பலியிட ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றான். தனது கீழ்ப்படியாமையை ஆவிக்குரிய விதத்தில் நீதிகரிக்க சவுல் முயன்றான். எனவேதான், பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம் என்று தேவன் உறுதியாய்க் கூறினார். சுய வஞ்சனை, நமது கிரியைகளுக்கெல்லாம்



**தனது கீழ்ப்படியாமையை ஆவிக்குரிய விதத்தில் நீதிகரிக்க முயலும் சவுல்**

நம்மைப் பொறுப்பெடுக்க விடாமல், மற்றவர்கள் மேல் பழி போட வைக்கும்.

### (இ) தன்னைத்தானே தாழ்த்த விருப்பமில்லாமை!

பெருமையின் உச்சக்கட்டத்தில் சவுல் இருந்தான்.

* தனக்கென்று தானே ஒரு ஜெயஸ்தம்பம் கட்டிக்கொண்டான்.
* சாமுவேல் தன்னைக் கனப்படுத்த வேண்டும் என்று நிர்ப்பந்தித்தான்.
* தேவன் தன்னை அங்கீகரிப்பதைவிட, ஜனங்கள் தன்னைக் கனப்படுத்த வேண்டுமென நினைத்தான்.
* தேவன் முன்பு தன்னைத் தாழ்த்தி, அவரது மன்னிப்பைத் தேடாமல், தன் ஜனத்தின் முன் தன்னை கனமுள்ளவனாய்க் காட்டிக்கொள்ள விரும்பினான்.

ஏற்கனவே கூறியதுபோல, நமது எல்லா கிரியைகளுக்கும் பின்விளைவுகள் உண்டு, ஒரு பகுதிக்கு மட்டும் கீழ்ப்படிவது முழுவதற்கும் கீழ்ப்படியாமல் போவதற்கு சமம்.

* தனது கிரியைகளினால் சவுல் தேவனைத் துக்கப்படுத்தினான்.
* இது உடனடியாக தேவன் அவனை நிராகரிக்க வைத்தது.
* தேவனும் சாமுவேலும் அவனை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டனர்.

தேவ சித்தத்திலிருந்து அவன் விலகினதால், வழி தவறிப் போய்விட்டான். நம் வாழ்வில் சவுலைப் போல, தேவ சித்தத்திலிருந்து விலகி நம்மில் ஒருவரும் வாழக் கூடாது என்று ஜெபிப்போம்.

### 5வது & இறுதி தவறு

### எதிர்த்து நிற்குதல்!

சவுலின் பெருமை அவனை சுய–வஞ்சனைக்கு நேராய் வழிநடத்தி, தனக்கென்று ஒரு மாயமான

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


## முழுநேர இந்தி வகுப்புகள்
## நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership

Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry

Diploma in Theology

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
& (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## நமது எளிய முயற்சிகளையும் தேவன் கனப்படுத்துகிறார்!

நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது சங்கீதம் – 136: 23

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே தேவ மகிமைக்காகவும், அவரது ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காகவும் எந்த வேலையையும் துணிந்து எடுக்கவும், எந்த சவாலையும் சந்திக்கவும் கூட திட மனதையும் தேவன் எனக்கு அருளியிருந்தார். எந்த பிரதிபலனையும் உடனேயே எதிர்பார்த்து நான் செயல்படவில்லை. 1976 ஆம் ஆண்டிலிருந்து 1986 வரை, நான் அரசாங்க பணியில் இருக்கும்பொழுது, விடுப்பு எடுத்துக் கொண்டு, எனது சொந்தச் செலவில் சுவிசேஷ சுற்றுப் பயணங்களை, இந்தியாவின் பல பகுதிகளில் சிறிய அளவிலான சுவிசேஷக் கூட்டங்கள் போன்ற வற்றை ஒழுங்கு செய்து நடத்தி வந்தேன்.

ஓரிரு மாதங்கள் வரைக்கும் எனது ஆவிக்குரிய நண்பர்களோடு இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் சொல்லப்படாத இடங்களில் சென்று அநேக ஆயிரக்கணக்கான மக்களை இயேசுவிடம் வழிநடத்த தேவன் உதவி செய்தார். எல்லோருடைய ரயில் டிக்கட்டுகளுக்காகவும், பேருந்து டிக்கட்டுக்களுக்காகவும், தங்கும் செலவுகளுக்காகவும் தேவனையே நோக்கிப் பார்க்க வேண்டியதாயிருந்தது. தேவனும் அற்புதவிதமாக எனக்கு உதவி செய்தார்.

இந்த ஊழியங்களின் மூலமாக செங்கல்பட்டு மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் கொடைக்கானல், ஊட்டி, திருவனந்தபுரம், பீர்மேடு, இடுக்கி, வண்டி பெரியார், விஜயவாடா, பங்களூர், மைசூர் போன்ற மாவட்டங்களின் குக்கிராமங்களுக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார். அவ்வாறு பல இடங்களுக்குச் செல்லும்போது எங்களது வாத்தியக் கருவிகள், சுவிசேஷக் கைப்பிரதிகள் போன்றவைகளை, பேருந்துகள், ரயில்கள் போன்றவற்றில் ஏற்றிச் செல்லும்போது பலவித சரீர கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். என்னுடைய பொருளாதார நிலைமையின் காரணமாக ஊழியத்திற்கென்று ஒரு வாகனம் வாங்க என்னால் அந்த நேரங்களில் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஆனால் கர்த்தர் எனது மனநிலையையும், என்னைக் குறித்த சாட்சிகளையும் அறிந்திருந்தார். ... **உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.** எபிரெயர் 6:10.

பிற்காலங்களில் என்னோடு ஊழியம் செய்த அநேகரை தேவன் ஆசீர்வதித்து அவரது தோட்டத்தில் வல்லமையாக உபயோகிப்பதை நான் அறிந்து கொண்டேன். என்னையும் தேவன் ஆசீர்வதித்து, இக்காலத்துக்கு ஏற்ற நவீன உபகரணங்களையும், கார், வேன் மற்றும் வைராக்கியமுள்ள சக ஊழியர்களையும் கொடுத்துள்ளார். அதனால் இரட்சிக்கப்படாத அநேக மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல தேவன் உதவி செய்கிறார். என்னை பல தேசங்களுக்கும் கொண்டு சென்று அநேக ஆவிக்குரிய நண்பர்களையும் பல தேசங்களில் தந்திருக்கிறார்.

அந்த தேவன் இன்றும் உயிரோடு இருக்கிறார். எந்தவித உடனடி பிரதிபலன்களையும், உயர்ந்த பதவிகளையும், எதிர்பார்க்காதே, தீய குறிக்கோள் இல்லாத மக்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். **உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.** பிரசங்கி 11:1. அவர் ஒருவனுக்கும் கடனாளியல்ல.

தேவனது ராஜ்யத்திற்காக எதையாகிலும் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டுள்ளேன். சூழ்நிலைகளைக் கவனிக்கக் கூடாது. **காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.** பிரசங்கி 11: 4. உலகமும் உலக மக்களும் கூட உங்களுக்கு உதவி செய்ய வருவார்கள்.

இக்காலத்தில், மக்கள் தங்களுடைய சுகத்தையோ, பணத்தையோ, தாலந்துகளையோ தேவ ராஜ்யத்தின் முதலீடாக வைக்க முன்வர தயங்குகின்றனர். ஆனால் உடனடியாக பெரிய உயர்வுகளை மட்டும் எதிர்பார்க்கின்றனர். அன்பு நண்பரே, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நான் மிகவும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறேன். உங்களையும் அவர் ஆசீர்வதிக்க முடியும். இயேசு கிறிஸ்துவுக்காக எதையாகிலும் செய்ய முன் வருவீர்களா ? உங்களது சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின் செல்ல ஆயத்தமா ? **எப்படியாகிலும், எவ்வளவு செலவு செய்தாகிலும் இயேசு கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் மக்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்.** (1 கொரிந்தியர் 9:22).

இவ்வார்த்தைகளை வாசிக்கும் நீங்கள், கர்த்தர் உங்களுக்காக ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிய வேண்டும். இவ்வுலகத்தின் பணம், ஆரோக்கியம், உறவுகள், செல்வாக்கு, புகழ் ஆகியவைகள் ஒரு நாளில் உங்களை ஏமாற்றும். ஆனால் இயேசு உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டார். இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள். ஒரு மிகப் பெரிய பிரதிபலன் உங்களுக்காகக் காத்திருக்கிறது.

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

அடையாளத்தை உருவாக்க வைத்துவிட்டது. இது அவனுக்குள் ஒருவித கடினமும், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிற குணத்தையும் உருவாக்கிவிட்டது. இந்த குணம் கீழ்ப்படியாமைக்கும், பிடிவாதத்திற்கும் சமமானதாகும். இதற்கு பின்விளைவுகள் நிச்சயமாக உண்டு. **அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப் படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாச மடைவான்.** நீதிமொழிகள் 29:1. அத்தகையவனுக்கு அழிவு திடீரென்று வரும்.

சவுலின் இந்த எதிர்த்து நிற்கும் குணம் அவனை மட்டும் தாக்காமல், எதிர்கால சந்ததியினரையும் தாக்கும் என்று அவன் அறியாதிருந்தான். கர்த்தருக்கு பலியிடும் ஊழியம் ஆசாரியர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் சவுலின் பெருமையும் பிடிவாதமும், சாமுவேலுக்காக அவனைக் காத்திருக்க விடவில்லை. இதைக் குறித்து அவன் கடிந்துகொள்ளப்பட்டபோது, அவன் பிடிவாதமான பதிலைத்தான் கூறினான். அது அவன் சிங்காசனத்தையே இழக்க வைத்தது. கீழ்ப்படியாமைக்கும், எதிர்த்து நிற்கும் குணத்திற்கும் பின்விளைவுகள் நிச்சயமாகக் காணப்படும்.

பிறருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் செய்கிறது இந்த எதிர்த்து நிற்கும் குணம். நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும், நமது பெற்றோர், மனைவி/கணவன், மூத்தவர்கள், மேனேஜர்கள், சபைத் தலைவர்கள், போதகர்கள் ஆகியோரிடத்திலும், குறிப்பாக தேவனிடத்திலும் நமது பணிவைக் காட்ட வேண்டும்.

இந்த குணம், நமது நடத்தைக் குரியது மட்டுமல்ல; இது இருதயத்திலேயே காணப்படுவதாகும். அப்படியானால், இக்குணமுடையவர்களுக்கு, அவர்களுக்குள்ளே ஒரு மாற்றம் தேவைப்படுகிறது.

இந்த எதிர்த்து நிற்கும் குணத்தைக் குறித்து வேதாகமம் விலையுயர்ந்த பாடங்களை நமக்குக் கற்பிக்கிறது:

* **இரண்டகம் பண்ணுதல், பில்லி சூனியப் பாவத்திற்கு சமமானது. அதை தேவன் அருவருக்கிறார்.** (1சாமுவேல் 15:23).
* **தேவன் தமது ஜனத்தை விட்டு விலகுவது மட்டுமின்றி, அவர்களுக்கே சத்துருவாக மாறி, கலகம் பண்ணுகிறவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறார்** (ஏசாயா 63:10).
* **கலகம் பண்ணுகிற தமது ஜனத்திற்கு விரோதமாக தேவனது கரம் இருக்கும்** (1சாமுவேல். 12:14, 15).
* **மனந்திரும்ப மறுக்கும் பட்சத்தில், நம்மை தேவன் சாத்தானிடமே ஒப்புக்கொடுக்க வேண்டியிருக்கும்** (1கொரிந்தியர் 5:5).

அன்பு நண்பர்களே, நமது இருதயம் கடினப்பட்டு மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாமல், அன்பு இல்லாமல் இருக்குமானால், தேவன் நம் இருதயங்களை மாற்ற வேண்டுமென்று அவரிடம் உதவிக்காக மன்றாட வேண்டும். **முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.** மத்தேயு 24:13, என்று வேதம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

தேவனது அழைப்பையும், வரங்களையும் தேவன் நம்மைவிட்டு எடுக்காமல் இருக்கலாம். ஆனால், நமது பெருமை, சுய–வஞ்சனை, எதிர்த்து நிற்பது, தேவ திட்டத்திலிருந்து விலகிச் செல்வது போன்றவை நம்மைத் தோல்விக்கு நேராக வழி நடத்தும். பெருமையின் அழிக்கும் தன்மையிலிருந்து நம்மைக் காத்துக்கொண்டு, நம் வாழ்வில் தேவ திட்டத்திலிருந்து திசை திருப்பும் நமது தவறுகளைக் கண்டு உணர்ந்து, அவற்றைத் திருத்திக் கொள்ள முயற்சிப்போம். நாம் தேவ சித்தத்தில் இணைந்து வாழ்கிறோமா என்று நமது வாழ்க்கையை நாமே சோதித்துப் பார்ப்போமாக.

*******


## உடனடி தேவை

### நெகேமியா வேதாகமக் கல்லூரி

**தேவ ஊழியத்திற்கு ஒரு வருட பயிற்சி பெற ஆட்கள் தேவை.**

1. **மாலைநேர தமிழ் கல்லூரிகளில் படிக்க ஆண்கள்/பெண்கள்**
2. **தங்கிப் படிக்க இந்தி தெரிந்த ஆண்கள்.**

**தொடர்புக்கு 98412 71858**

**அறுவடை மிகுதி; ஆட்களோ கொஞ்சம். தயவு செய்து உதவ முன்வாருங்கள்.**

**– ஆசிரியர்**

## அலுவலகம்

நமது ஊழிய அலுவலகத்திற்கு கம்யூட்டர் (DTP) பணியாளர்கள் / தட்டச்சர்கள் தேவை. தகுதியான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புக்கு 98412 71858**


## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும். கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

- ஆசிரியர்

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

ஊழியங்களின்

**50வது ஆண்டு** (1969 - 2024)

சுவிசேஷக் கூட்டங்கள்

09.08.2024, வெள்ளி
10.08.2024, சனி
11.08.2024, ஞாயிறு
மாலை 6.00 மணி

இடம் :

அழைப்பின் எதிரொலி

10, முகமது அப்துல்லா 2–வது தெரு,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

98412 71858 தயவு செய்து ஜெபிக்கவும்.

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |

SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th JUNE 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

GOD BLESS YOU!

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj at Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**